விலை: 1 ரூபா

# உதயசூரியன்

UTHAYASURIYAN

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

கட்டணம்
இலங்கை
ஒரு ஆண்டு 60-00
அரை ஆண்டு 30-00
இந்தியா
ஒரு ஆண்டு 75-00
ஏனைய நாடுகள்
ஒரு ஆண்டு
15 அமெரிக்க டொலர்

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
1980 -12- 1
PERIODICALS DIVISION
LIBRARY

கதிர் 1, திருவள்ளுவராண்டு 2011, 17—10—80, வெள்ளிக்கிழமை, ஒளி—3

# விடுதலைத் தென்றல் வீசும்வரை

## போராட்டப் புயல் பொங்கி எழும்!



### பிரதமர் பிரேமதாசாவுக்கு தலைவர் அமிர் தகுந்த பதில்!

**அந்நியர் ஆட்சியிடம் இழந்துவிட்ட தமிழீழத்தின் சுதந்திரத்தை மீட்டு, மதசார்பற்ற சமதர்மத் தமிழீழத்தை நிறுவுவதற்கே தமிழ் மக்கள் எமக்கு ஆணை தந்திருக்கிறார்கள்.**

**அந்த இலட்சியத்தை அடைவதற்கு எந்த விலையையும் கொடுப்போம்- அந்த விலை என் உயிரானால் அதை முதலில் கொடுத்துத் தமிழ் ஈழத்தை அடைந்தே தீருவோம்'' என்று தமிழர் தலைவர் அமிர் அவர்கள் காங்கேசன்துறையில் நடைபெற்ற மாபெருங்கூட்டமொன்றில் அறிவித்தார்.**

அவர் மேலும் பேசுகையில்: இந்த நம்பிக்கையோடே மக்கள் இருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம், ஆயினும் நியூயோர்க்கில் ஆசிய மக்கள் அபிவிருத்திக்கருத்தரங்கொன்றில் சிறீலங்காவின் பிரதமர் பிரேமதாசா தமிழீழக்கோரிக்கை மறைந்துவிட்டது. தமிழீழப் போராட்டம் அதிர்ஷ்டவசமாக மறைந்து விட்டது என்று கூறியதாகப் பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. தமிழ் ஈழ இலட்சியத்திற்கே தமிழ் மக்கள் ஆணை தந்திருக்கிறார்கள். இதனை மாற்றியமைக்க யாருக்கும் உரிமையில்லை. எங்கள் தலைவிதியை பிரதமர் பிரேமதாசா நிர்ணயிக்க முடியாது, பிரதமரின் கூற்றை முற்றாக நிராகரிக்கின்றோம்.

1956ம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த பண்டாரநாயகா லண்டனிலே நின்று தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவிட்டேன் என்று சொன்னார். அதன் பின்னர்தான் தந்தை செல்வாவுடன் ஒப்பந்தம் பற்றிப் பேசினார். ஏன் இந்த ஐ.தே, கட்சி ஆட்சியின் ஜனாதிபதி ஜெயவாத்தனா இந்தியாவிற்குச் சென்று சொன்னாரே தமிழர்களின் பிரச்சினை இல்லை என்று.

நாம் அடுத்து இந்தியாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் சென்று தமிழீழ இலட்சியத்தை முன்வைத்து அதன் அவசியம் பற்றிப்பிரசாரம் செய்யவில்லையா? இலங்கைக்கு வந்தும் பாராளுமன்றத்திலே என்னையும் மனைவியையும் எவ்வளவு மூர்க்கத்தனமாகவும் கீழ்த்தரமாகவும் அமைச்சர் சிறில்மத்யூவும் ஏனையோரும் தாக்கிப் பேசினார்கள். அதற்கும் பதில் கொடுத்தோம்; இன்னும்பதில் கொடுப்போம்.

இலங்கையிலுள்ள இருபத்திரண்டு மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்டத்தின் பொருளாதார அபிவிருத்தியை அந்தந்த மாவட்ட மக்களே கவனித்துக் கொள்ள சட்ட அதிகாரத்தை ஓரளவுக்கேனும் இம்மாவட்ட அபிவிருத்திச்சபை அளிக்கின்றதென்பதனால் இதனை ஆதரித்தோம் சிறிமாவோ ஆட்சிக்காலத்திலும் அபிவிருததித் திட்டங்களுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கினோம், கச்சேரிகளில் நடைபெறும் அரசியல் அதிகாரி கூட்டிய மாநாடுகளில்

—8-ஆம் பக்கம் பார்க்க

# அமிர்தலிங்கம் தலைமை நமக்கெல்லாம் பெருமை

## தமிழக அவைத்தலைவர் ராஜாராம் புகழாரம்!

உங்களுக்கு ஓர் ஒப்பற்ற தலைவர் கிடைத்திருக்கிறார். பெருமதிப்புவைத்துள்ள ஒருபெரும் தலைவராய் அவர் திகழ்கிறார், நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றுதான்—உங்கள்தலைவர் காட்டும் வழியில் உங்கள் விடுதலைப் பயணத்தை உறுதியோடு மேற்கொள்ளுங்கள்!''

தமிழ் நாடு சட்டசபை அவைத் தலைவரும் அ.தி மு.க தலைவர்களில் ஒருவருமான திரு. ராஜாராம் அவர்கள் யாழ் மாநகரசபை தமக்கு அளித்த விருந்து வைபவத்தில் உரைநிகழ்த்துகையில்இவ்வாறு தலைவர் அமிர் அவர்களுக்கு புகழாரம் சூட்டினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

''உலகமெங்கும் தமிழினம் அடிமை இனமாய் உருக்குலைந்து கிடக்கிறது.தேயிலைகிள்ளுகிறவனாய்— தெரு பெருக்குகிறவனாய கரும்பு வளர்க்கிறவனாய் கல் உடைக்கிறவனாய்

—8-ஆம் பக்கம் பார்க்க



அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த தமிழ் நாடு சட்டசபை அவைத் தலைவர் திரு ராஜாராம் அவர்கள் தமிழீழத் தந்தை செல்வா அவர்களின் நினைவாலயத்திற்கு சென்று மலர் அஞ்சலி செலுத்தினர் அவருடன் தலைவர் திரு. அ.அமிர்தலிங்கம் உட்பட ஏனையகூட்டணித்தலைவர்களும், கூட்டணிப் பிரமுகர்களும் காணப்படுகின்றனர்.

## சுருதி மாறும் சுதந்திரன்!

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை உலகெங்கும் பிரசாரம் செய்யும் ஒரு பெரும் விடுதலைக் குரலாக ''சுதந்திரன்'' முன்பு விளங்கியது. இன்று ''சுதநதிரன்' விடுதலைப் போராட்டம் விழும் வகையில் செய்திகளை வெளியிட்டு வருகிறது. தடித்த எழுத்துக்களில் ''சுதந்திரன்'' முன்பக்கத்தில் அண்மையில் வெளிவந்த செய்தித் தலைப்புக்களில் சில இவை:

மோதல் முறைக்கு முற்றுப்புள்ளி!

ஒத்துழைப்பு அரசியல் ஆரம்பம்!

ஒரே நாடு கொள்கைக்கு அத்திவாரம்!

—சுதந்திரன் 3.9.1980
(முன்பக்கத் தலைப்பு)

இலங்கையில் தமிழர் பிரச்சினை எதுவும் கிடையாது!

—சுதந்திரன் 10.9.1980
(முன்பக்கத் தலைப்பு)

தமிழீழப் போராட்டம் கைவிடப்பட்டு விட்டது!

—சுதந்திரன் 5.10.80
(முன்பக்கத் தலைப்பு)

பார்த்தால்—இந்தப்பத்திரிகை ஆட்சியாளர் பத்திரிகையா—நமதுபத்திரிகையா என்ற ஐயம் எழவில்லையா உங்களுக்கு?

**தமிழ் ஈழம் தமிழர் தாகம்**

# இந்து கலாசார அமைச்சருக்கு கறுப்புக்கொடி!

தமிழர் தம் ஒரே விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணியை விட்டு வெளியேறி — மந்திரி பதவிக்காக யு. என். பி. அரசாங்கத்தில் சேர்ந்து தமிழினம் முழுவதற்கும் மாபெரும் துரோகம் செய்த இந்து சமய கலாச்சார பிராந்திய அபிவிருத்தி — தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சர் இராசதுரைக்கு மட்டக்களப்பு மக்கள் அண்மையில் முறையான பாடம் புகட்டினார்கள்.

படுவான்கரைப் பகுதி ஒரு காலத்தில் இராசதுரையின் கோட்டையாக விளங்கியது. வலையிறவு — வவுணதீவு ஆற்றைக் கடந்தால் இராசதுரைக்கு எப்போதும் வரவேற்பே காத்திருந்தது ஒரு காலத்தில். பூமாரி பொழிந்து — மலர் மாலை சூட்டி பூரண கும்பம் வைத்து அப்பொழுதெல்லாம் இப்பகுதி மக்கள் பூரிப்போடு இராசதுரையை வரவேற்பார்கள். ஆனால் இன்றோ அதே படுவான் கரைப்பகுதி மக்கள் தெருவெல்லாம் கறுப்புக் கொடிகளைத் தொங்கவிட்டு இராசதுரையின் முகத்தில் கரிபூசி அனுப்பியிருக்கிறார்கள்.


## இராசதுரை முகத்தில் கரிப்பூச்சு!

அண்மையில் பொலிஸ் பட்டாளம் புடைசூழ அமைச்சர் இராசதுரை படுவான்கரைப் பகுதிக்கு விஜயம் செய்தார். இந்நிகழ்ச்சி போன வாரம் இடம் பெற்றது. இராசதுரையின் பளபளக்கும் ''மந்திரிக் கார்'' கிராமத்தின் உள்ளே நுழைந்தது — தெருக்கம்பங்களில் தொங்கிய கறுப்புக் கொடிகளைக் கண்டு அமைச்சர் திகைத்துப்போனாராம். கறுப்புக்கொடிபோல் அமைச்சரின் முகமும் கறுப்பு ஆயிற்றாம், ஒரு மூலையில்போய் ஒதுங்கி —தன் ஏவலாளர்களை விட்டு கொடிகளை ஒவ்வொன்றாக அகற்றிய பின்பே ஊருக்குள் அவரால் ''ஒருவித அசட்டுச் சிரிப்போடு'' நுழைய முடிந்திருக்கிறது.

குறிஞ்சாமுனை வவுணதீவு —கன்னங்குடா பகுதி மக்களின் உள்ளக் குமுறலை — கறுப்புக்கொடிகளாய்தொங்க விட்டு — அப்பகுதி மக்கள் இராசதுரைக்கு சரியான பாடம் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள்.

சிலரைப்பலகாலம் ஏமாற்றலாம் — பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம்- எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது?'' என்று இராசதுரை முன்பு கூட்டங்களில் பிரசங்கம்செய்வது இப்போது நினைவுக்கு வருகிறது.

## பறவைகளே! பறவைகளே!



பறவைகளே! பறவைகளே!

சின்னஞ் சிறு பிள்ளைகள் சிலர் விடுதலைப் போர்க்களத்தில் சிறு சோறாக்கி விளையாடுகிறார்கள்.

விளையாடுகிற இடம் வேறு இடம் என்றால் பிள்ளைகளை விடலாம். விளையாடுகிற இடம் விடுதலைப் போர்க்களம்.

உண்மைச்சோறு சமைக்கவேண்டிய இடத்தில் இத்தப் பிள்ளைகள் உருளைக்கல் சோறு சமைத்து — உண்ணுங்கள் என்று தருகிறார்கள்.

பெரிய மனிதர்கள்கூட இந்த விளையாட்டில் சிறிய பிள்ளைகள்போல் இறங்கியிருக்கிறார்களே—பெரிய வேதனையாய் இருக்கிறது.

இரண்டு மூன்று ஆண்டுகளில் ''தமிழ்ஈழம் பிரகடனம்', என்று லண்டனில் உருளைக்கல்சோறு சமைத்து இரண்டு மூன்று பிள்ளைகள் விளையாடியிருக்கிறார்கள்.

வைகுந்தவாசன் பெரிய மனிதர்தான்—ஆனால் லண்டனில் ஒன்பது தனி மனிதர்களை மட்டும் தொலைபேசியில் தொடர்புகொண்டுவிட்டு — இந்தப் பிரகடன அறிவிப்பைச் செய்து அவர் சிறிய பிள்ளை ஆகியிருக்கிறார்.

ஒரு மிகப்பெரிய விஷயமான''தமிழ் ஈழப் பிரகடனம்'' ஒரு மிகச்சிறிய விஷயம் ஆக்கப்பட்டிருக்கிறது.

விதைவிதைக்காமலே இரண்டு ஆண்டுகளில் மரம்முளைக்கும் என்று 'கதை' பண்ணுவது விடுதலைப் போர் ஆகாது.

தமிழ்ஈழ மக்களை உசார் படுத்துவது என்பது வேறு—தமிழ் ஈழப்போராட்டத்தைப் ''பகிடி'' பண்ணுவது என்பது வேறு.

இரண்டு ஆண்டுகளில் ''தமிழ் ஈழப் பிரகடனம்'' என்கிறீர்களே—வைகுந்தவாசன் அவர்களே!—இரண்டு ஆண்டுகளின் பின் மக்களுக்கு என்ன சொல்லப்போகிறீர்கள்?

முன்பெல்லாம் தமிழ் நாட்டில் இருந்து படைவரும் என்று ஒரு கதை அவிழ்த்து விடப்பட்டது—மக்களெல்லாம் தமிழ் நாட்டைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள் — இப்போது லண்டனில் இருந்து ''தமிழ்ஈழப்பிரகடனம்'' என்று ஒரு கதை அவிழ்த்துவிடப்பட்டிருக்கிறது—மக்களெல்லாம் லண்டனைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பறவைகளே! பறவைகளே!

''தமிழ் ஈழப் பிரகடனம்'' என்பது எப்போது நிகழ்கிறதோ—அதே நிமிடம் சிங்கள ஏகாதிபத்தியத் தகனம் என்பதும் நிகழ்ந்து முடிய வேண்டிய ஒன்றாகும்.

வாய்ச்சத்தங்கள் போடுகிறவர்களைக் கேட்கிறேன்—இதற்கான ஆயத்தங்கள் வகுக்கப்பட்டாயிற்றா?

உங்கள் பாட்டில் லண்டனில் நின்று இரண்டு ஆண்டுகளில் ஈழப்பிரகடனம் என்று சங்கம் ஆர்க்கிறீர்கள்,

ஈழப்போராட்டத்துக்கு தோள் தருகிறவனைக் கேளாமல் ஈழப் பிரகடனத்துக்கு நாள் தருகிறீர்கள்.

மாபெரும் மக்கள் சக்தி தமிழர் விடுதலைக் கூட்டணி—அதன் மாபெரும் தலைமையை தொடர்பு கொள்ளாமலே உங்கள் மாபெரும் ஈழப்பிரகடன அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

பறவைகளே! பறவைகளே!

தலைவனோடு கலந்தாலோசிக்கப்படாத விடுதலைப் பிரகடன அறிவிப்பை உலகில் முதல்தடவை நான் தமிழ்ஈழ விடுதலை வரலாற்றில் தான் காண்கிறேன்.

காலம் அறிந்து தமிழ் ஈழத்தலைவர் செய்ய வேண்டிய ஒரு பிரகடனத்தை யாரோ ஒலமிட்டு தம்பாட்டில் ஓதி முடித்திருக்கிறார்கள்.

வானிலை ஆராய்ச்சி நிலையம் அமைதியாக இருக்கிறது—எங்கோ வாழைதோட்டத்தில் இருக்கிற குருவி ஜோதிடன் இரண்டு நாளில் மழை பெய்யும் என்று வாயடித்திருக்கிறான்.

பறவைகளே! பறவைகளே!

சிதறிச் சிதறிச் சிந்திக்கிறவர்களால்தான் தமிழினம் சிதறிச் சிதறி நாசமாயிற்று.

ஒவ்வொருவனும் தன்னைத் தலைவன் என்று நினைக்கிறான்— தன்னோடு இன்னும் மூன்றுபேர் சேர்ந்தால் தான்ஒரு பெரிய கட்சி என்று நினைக்கிறான்.

பறவைகளே! பறவைகளே;

''தமிழ் ஈழப் பிரகடனம்'' பற்றி எனது பணிவான இன்னொரு கருத்தைச் சொல்லுகிறேன் —தயவு செய்து காது கொடுங்கள்.

இந்தப் பிரகடனம் இருக்கிறதே— இது ஒரே ஒரு தடவை செய்யப்பட வேண்டியது முன் அறிவித்தல் கொடுத்து இப்படியான ஒரு பிரகடனம் எந்தக்காலத்திலும் செய்யப்படுவதில்லை.

''விரைவில் எதிர்பாருங்கள்!'' என்று விளம்பரம் தாங்குவது திரைப்படமாக இருக்கலாமேதவிர விடுதலைப் பிரகடனமாக இருக்க முடியாது.

பிரகடனம் செய்வது சரி— பிரகடனம் செய்யப்போகிறோம் என்று பிரகடனம் செய்வது பிழை.

பறவைகளே! பறவைகளே!

வைகுந்தவாசன் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தில்வைத்துள்ள பற்றுக்கும் பாசத்துக்கும் நான் தலைவணங்குகிறேன்.

ஆனால் அவரைப்போன்ற பெரிய மனிதர்கள்— உருளைக்கல் சோறு சமைக்கும் சிறிய பிள்ளைகள் ஆகக்கூடாது என்பதே எனது ஆசையாகும்.

பொறுப்புக்கள் உங்களுக்கு வெளியே நிறைய உண்டு—பொறுப்புக்களை உணர்ந்து கொண்டு புரியுங்கள் தொண்டு!

நூறு குழுக்களாய்— லண்டனிலும் பிறநாடுகளிலும் நமது வீரர்கள் பிரிந்து நிற்கிறார்களே! இந்த ஊறு துடைத்திட முதலில் ஒருவழி காணுங்கள்

உலகமெங்கும் தமிழ்ஈழ விடுதலை இயக்கத்துக்காய் நிதி திரட்டப்படுவதாக அறிகிறேன்—சிதறிக்கிடக்கும் தமிழ் ஈழ விடுதலை வீரர்களைப் போலவே இந்த நிதியும் ஓரிடத்தில் சேராமல் உலகெங்கும் சிதறிப்போவதாகவும் அறிகிறேன்—உடனடியாக இந்த அநியாயத்துக்கு வேலி போடுங்கள்!

ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட பிரச்சாரம் நமது விடுதலை இயக்கத்தைக் கொன்று குழிதோண்டிப் புதைத்துவிடும் லண்டனில் உலகப் பிரச்சாரத்தை ஒருமுகப்படுத்த ஒரு தலைமைநிலையம் இன்றே நிறுவுங்கள்.

மக்கள் சக்தியைக் காலின்கீழே போட்டு முடிவுகள் எடுக்காதீர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணிக்குத் தலைவணங்குங்கள்.

பறவைகளே! பறவைகளே!

பொறுப்புக்கள் இல்லாமல் நடக்கும் பொறுப்புக்களுக்கு உரியசிலருக்கு பொறுப்புக்கள் சிலவற்றை நினைவுபடுத்தி ஆயிற்று.

வார்த்தைகள் போதும்—இனி வாருங்கள்புறப்படுவோம்

தூக்கமில்லாத உங்கள் இறக்கைகள் விழித்தபடியே இருக்கட்டும்!

வரிசை விலகாதீர்கள்.


—நிதானமாய்ப் பறப்போம்!

கவிஞர் காசி ஆனந்தன்

## இளைஞர்களே! இலவச விளம்பரம் வேண்டுமா?

தமிழ் இளைஞர்களே! உங்களுக்கு 'சீப்பப்பிளிசிட்டி' அதாவது இலவச விளம்பரம் தேவையா? அப்படியானால் அதற்கு வழிகோலித்தருகிறோம் தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தாக்கி காட்டிக் கொடுப்போர் கயவர்கள் துரோகிகள் என்றெல்லாம் கன்னாபின்னா என்று திட்டி எழுத மறந்து விடாமல் உங்கள் புகைப்படத்துடன் உங்கள் பகுதி 'தினபதி' நிருபரிடம் கொடுத்து விடுங்கள்.

தினபதியில் அது மேலும் சுவையூட்டப்பட்டு முதல் பக்கத்தில் பிரசுரமாகும் இந்தச் செய்தி 23.7.72ஆம் திகதி சுதந்திரன் இதழில் வெளிவந்தது. தினபதிக்கு மட்டுமின்றி இப்பொழுது சுதந்திரனுக்கும் அனுப்பினால் விளம்பரம் கிடைக்கும்.



# இலட்சிய இதயங்களோடு..

பேரறிஞர் அண்ணா தமிழ்நாட்டு அரசியலில் ஓர் புதுமையான மாற்றத்தை ஏற்படுத்தினார். இயக்கத் தொண்டர்களுக்கும் தலைமைக்கும் இடையில் இதயங்கள் உறவாடும் நிலைமையை உருவாக்கினார், அண்ணாவின் மறைவின் பின் அண்ணா வளர்த்த இயக்கம் பிளவுபட்டாலும் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இரண்டுமே ஒன்றையொன்றுபோட்டிபோட்டுக்கொண்டு அண்ணாவின் இலட்சியங்களை முன்வைத்து இயங்குவதே அவர் தமிழ்நாட்டு அரசியலில் ஏற்படுத்திய பெருந்தாக்கத்திற்குச் சான்றாகும்.

தமிழ் ஈழ விடுதலைக் கோரிக்கை கடந்த ஐம்பதாண்டு அரசியலில் தமிழ்த் தலைவர்கள் பெற்ற அனுபவத்தின் மொத்த விளைவாகும். ஒற்றையாட்சி அரசியல் திட்டத்தில் பாதுகாப்புகளைக் கோரிய தலைவர்களும் இணைப்பாட்சியில் மாநில சுயாட்சி கோரிய தலைவர்களும் 1972ல் ஒருங்கிணைந்து புதிய அரசியலமைப்பில் தமிழ் இனத்தின் உரிமைகளை நிலைநாட்டும் பொருட்டு ஆறு அம்சங்களைக்கொண்ட கோரிக்கையை விடுத்தனர். ஆட்சியாளர் அக்கோரிக்கைகளை உதாசீனம்செய்து நடந்தது மாத்திரமன்றி மக்களுக்கு மேலும் பல துன்பங்களை விளைத்தனர். தமிழர் கூட்டணிவிடுத்த ஆறுகோரிக்கையில் இணைப்பாட்சிதானும் இடம்பெறவில்லை. ஆனால் 1972க்கும் 76க்கும் இடையில் ஆளுவோர் செய்த கொடுமைகள் இணைப்பாட்சியைக்கூட ஒன்றுபட்டு கோர முடியாத இயக்கங்களைதமிழ் ஈழம் என்ற தனிநாட்டை திறுவத்தீர்மானிக்கும் நிலையை ஏற்படுத்தின. இந்த வரலாற்றைத் திரிப்பதில் இன்று சிலர் முனைந்து நிற்கும் காரணத்தால் இவற்றை ஞாபகப்படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. முழுப்பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கும் பாங்கில் சிலர் அமரர் வன்னியசிங்கம் காலத்திலும் அதற்கு முன்னரும்கூடத் தனிநாடு கோரினோம் என்ற எண்ணம் ஏற்படும் வகையில் பேசியும் எழுதியும் வருகின்றனர். 1956ம் ஆண்டில் தனிச்சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்த நேரத்தில், முன் சிங்களத்தலைவர்களுடன் தான் ஒத்துழைத்து இந்த நிலையை ஏற்படுத்திய பிழைக்குப் பிராயச்சித்தம் செய்யவிரும்பிய திரு. செ. சுந்தரலிங்கம் தனிநாடு அமையவேண்டுமென்று குரல்கொடுத்தார். தந்தை செல்வாவும் அமரர் வன்னிய சிங்கமும், டாக்டர் நாகநாதனும் அக்கோரிக்கையை எதிர்த்தனர். பதினெட்டு வருடங்களாகத்தந்தை செல்வா தனித்தமிழ்நாடு என்ற கொள்கையை ஏற்க மறுத்தார். 1975ல் காங்கேசன்துறை இடைத்தேர்தலிலேயே தந்தை முதன் முதலாகத் தமிழ் ஈழம் பற்றிப் பேசினார். முப்பது வருடமாகத் தந்தைமுன்வைத்த கோரிக்கையை இன்று நாம்கைவிட்டு விட்டோம் என்று சிலர் கூறுவதில் இரண்டுபெரிய பொய்கள் இருக்கின்றன. முதற் பொய் முப்பது வருடமாகத் தந்தை தமிழ் ஈழம் கோரினார் என்பது.

தமிழ் ஈழ இலட்சியத்தை நாம் கைவிட்டு விட்டோம் என்று கூறுவது இரண்டாவது அபாண்டமான பொய்யாகும். 'பொய் எவ்வளவு பெரிதோ அவ்வளவு சுலபத்தில் அது நம்பப்படும். பெரிய பொய்யை எத்தனை தரம் திருப்பித் திருப்பிக் கூறுகின்றார்களோ அத்தனை ஆழமாக அது மக்கள் மனதில் பதியும்'' என்பது ஹிட்லர் வகுத்த பிரசாரச் சித்தாந்தம் அதை நடைமுறைப்படுத்துவதில் கைதேர்ந்தவர் டொக்டர் கெபல்ஸ். அந்தப் பொய்களின் மொத்த விளைவு ஜெர்மன் நாட்டுக்கும் இலட்சக் கணக்கான மக்களுக்கும் அழிவு. பிரசாரத்தின் நோக்கத்தை இலட்சிய இதயங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

முதலில் ஒரு சில தலைவர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தினார்கள், அடுத்துப் பாராளுமன்றக்குழுதான் நினைத்தபடி செய்வதாகக் குற்றஞ் சாட்டியுள்ளனர். மத்திய செயற்குழு முடிவெடுத்தவுடன் பொதுக்குழுவைக் கூட்டுங்கள் என்றனர். பொதுக்குழு ஆழமாக, நீளமாக, விரிவாக ஆராய்ந்து மிகப்பெரும்பான்மையாக முடிவெடுத்தவுடன் இயக்கத்தையே அழிக்க முற்படுகின்றனர், இயக்கத்தை எப்படி அழிக்க வேண்டுமென்பதற்கு உலகில் சில தீவிரவாத இயக்கங்கள் ஒரு சித்தாந்தத்தையே உருவாக்கி வைத்திருக்கின்றன. தலைவர்க்ள்மீது மக்கள் நம்பிக்கை இழக்கச்செய்தால் இயக்கம் அழிந்துவிடும் என்பது அவர்கள் சித்தாந்தம். நம்பிக்கை இழக்கச் செய்வதற்கும் விஞ்ஞான ரீதியான வழிவகைகளை வகுத்திருக்கின்றன. சமீபத்தில் ஈரானில் இதுபற்றிய ஒலிப்பதிவு நாடாக்களே கைப்பற்றப்பட்டன. தெரிந்தோ தெரியாமலோ நம்மவர்கள் சிலர் இந்த அழிவுப் பாதையில் நடக்கத் தொடங்கி

# தலைமையைத் தாக்கும் தவறான தத்துவம் தமிழினத்தை அழிக்கும்!

விட்டனர். தண்டவாளத்தைவிட்டு விலகிய புகைவண்டி போலச்சிலர் செல்கின்றனர். மோதிப்புரண்டு, கவிழ்ந்தபின் வேகம் நிற்கும் போலும். கவிழுமுன் நிறுத்தினால் சேதம் தவிர்க்கப்படும் அதைச்செய்ய நல்ல இதயங்கள் முயற்சிக்கவேண்டும். அன்பாகப் பண்பாகப் பாதையை விட்டுச் சென்று கொண்டிருப்போரைத் திருப்பிக்கொண்டு வர முயற்சிப்போம். முடியாவிட்டால் இயக்கத்தைத்தவறாக இழுத்துச்செல்லாது துண்டிப்போம். அந்தப்பணியில் வாராவாரம் இலட்சிய இதயங்களோடு உறவாட நான் விரும்புகிறேன்.

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் பற்றிப் பாராளுமன்றத்தில் நான் பேசும்போதே எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி எம்நிலையை விளக்கினேன். சுதந்திர இறைமையுள்ள, மதசார்பற்ற, சோசலிச தமிழ் ஈழத்தை நிறுவ உழைப்பது எமது கடமை என்பதை ஆங்கிலத்திலும் தமிழிலும் எடுத்துக்கூறினேன். இலங்கையிலுள்ள இனப்பிரச்சினைக்கு அபிவிருத்திசபைகள் எவ்விதத்திலும்மருந்தல்ல என்பதை உறுதியாக கூறினேன். சனாதிபதியின் ஆணைக்குழுவும்அவ்வாறேகூறியது கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் அறிக்கையும் அதைத் தெளிவாகக்காட்டியது. பாராளுமன்றத்தில்பேசிய எந்தஅமைச்சரும்அடவிருத்திச்சபைகள் தமிழ் இனத்தின்பிரச் சினைகுத் தீர்வு என்று கூறவில்லை நம்மவர்சிலர்மாத்திரம் அக்கருத்தை வலியுறுத்திச் செய்து வரும்

## அமிர்

# சிங்கள மொழித் தகைமை பற்றி பாராளுமன்றத்தில் பண்டிதர் கேள்வி!

—காவலூர் பா.உ கா. பொ. இரத்தினம் பாராளுமன்றத்தில் உத்தியோகத்தர்களின் சிங்கள மொழி வழித் தகைமை பற்றிய சுற்றறிக்கைகளை வெளியிடுவதில் காலத்தாழ்வு ஏற்படுவதை இடித்துக்காட்டிப் பேசியதாவது—

சிங்களத்தில்தகைமைபெறாததற்காக உத்தியோகத்தர்களை தண்டிக்க வேண்டாமென்று பொதுநிர்வாக பெருந் தோட்டத்துறை அமைச்சு. அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் முதலிய நிறுவகங்களுக்கு விடுத்த சுற்றறிக்கையைப்பற்றிய கேள்வியை மீண்டும் எழுப்ப விரும்புகிறேன். சென்ற முறை இதுபற்றிக் கேட்டபொழுது இந்த விளக்கம் குறைவான சுற்றறிக்கையை விளக்கி எல்லா அரசாங்க நிறுவகங்களுக்கும் ஒரு புதிய சுற்றறிக்கை வெளியிடுவதாகப் பிரதி அமைச்சர் எனக்கு இச்சபையில் உறுதி கூறினார். எனினும் அந்தச் சுற்றறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை. இந்தச் சுற்றறிக்கையை வெளியிடுமாறு நான் பிரதியமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதனுடன் சேர்ந்த இன்னொரு பிரதான விடயத்தையும் கேட்க வேண்டியுள்ளது. தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களின் சிங்களத் தகைமை குறித்து அமைச்சரவைத் துணைக்குழு தயாரித்த அறிக்கை மீது அமைச்சரவை எடுத்த முடிவுகளின் அடிப்படையில் வெளியிடப்படவேண்டியசுற்றறிக்கையை வெளியிடுவதற்கு காலம் தாழ்த்தப்படுகிறது. தமிழ் அரசாங்க உத்தியோகத்தரைப் பொறுத்தளவில் இது மிகவும் பிரதானமான விடயம் என்பதை ஏற்றுக்கொள்வீர்கள். இதனாலேதான் இங்கிருக்கும் கிராமிய கைத்தொழில் அமைச்சர் உட்பட அமைச்சர் குழுவொன்றை அரசாங்கம் இந்த விடயத்தை ஆராய்வதற்கு நியமித்தது. மாண்புமிகு ஜனாதிபதிக்கு இதுபற்றி நான் எழுதியபொழுது இச்சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படும் என்றும் எனக்கும் ஒரு பிரதி அனுப்பப்படுமென்றும் அறிவித்தார் இன்னும் இச்சுற்றறிக்கை வெளியிடப்படவில்லை என்பதையும் தமிழ்அரசாங்க உத்தியோகத்தர்கள் தங்களுக்கு என்ன நடக்கும் என்பது தெரியாமல் இருக்கிறார்கள் என்பதையும் மனவருத்தத்துடன்சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்பொழுதும் சில தமிழ் உத்தியோகத்தர்கள் வேலை நீக்கம் செய்யப்படுகின்றனர். வேலை நீக்கம் செய்யப்பட்ட தமிழ் உத்தியோகத்தர்கள் மீளவும் தங்கள் அரசாங்கம் வேலையில் சேர்க்குமென நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

## உத்தியோகம் இழந்தோர்!

சிங்கள மொழித்தகமை பெறாமையினால்வேலை இழந்தவர்கள் பற்றி நான் ஏப்ரல் மாதம் 10ம்திகதி இச்சபையில் பேசியபொழுது இவர்களுடைய பட்டியலை அனுப்புமாறும் விபரங்களைத் தருமாறும் பிரதியமைச்சர் கேட்டிருந்தார். நான் வேலையிழந்தோர் பட்டியலையும் விபரங்களையும் அனுப்பினேன். இவர்களுக்கு உடனே மீளவும்வேலை கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

# நன்றியும் நம் பணிகளும்

உதயசூரியன் முதலாம் இதழ்ப் பிரதிகள் வெளியிட்ட முதலாம் நாளிலே விலைப்பட்டுவிட்டன, பல இடங்களிலிருந்து மேலும் பிரதிகளை அனுப்புமாறு கேட்டுத் தந்திகளும் கடிதங்களும் எங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் ஆர்வத்துக்கும் ஆதரவுக்கும் எங்கள் நன்றியும் பாராட்டும் உரியன.

உதயசூரியனைப்பாராட்டியும் வாழ்த்தியும் பாட்டுக்களையும் உரைகளையும் அன்பர் பலர் அனுப்பியுள்ளர். இவற்றை வெளியிட எங்களுக்கு விருப்பம் இருப்பினும், ஏட்டினில் போதிய இடம் இன்மையால் சிலவற்றை மட்டுமே வெளியிடுவதற்கு முயல்வோம்.

உதயசூரியனை விற்பனை செய்வதற்கும் பலர் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்யுமாறு கேட்டுளர்- உதயசூரியன் தமிழ் ஈழத்திலும் சிங்கள சிறீலங்காவிலும் மட்டுமன்றித் தமிழர் வாழும் இடங்கள் எங்கும் — உலக நாடுகள் அனைத்திலும்—உலாவரல்வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோளாகும். எனவே, பிறநாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் தங்கள் தங்கள் நாடுகளில் விற்பனையாளர்களை ஒழுங்குசெய்து உதவினுல்நன்று.

பல அன்பர்கள் ஏட்டுக் கட்டணங்களை அனுப்பி வைத்துளர். இலங்கைக்கும், இந்தியாவுக்கும் ஆண்டுக் கட்டணம் 60 ரூபா; அரை ஆண்டுக் கட்டணம் 30 ரூபா. பிறநாடுகளுக்கு 15 அமெரிக்க டொலர் என இப்பொழுது விதித்துளோம்.

தாள், மை முதலியவற்றின் விலையும் அச்சுக் கூலி முதலியனவும் நாளுக்குநாள் ஏற்றமடைகின்றன. எனினும் குறைந்த கட்டணங்களைப்பெற எண்ணியே இப்பொழுது இவ்வாறு அறவிடுகிறோம். எனவே எல்லா நாடுகளிலுமுள்ள தமிழ்ப் பெருமக்கள் கட்டணங்களை அனுப்பி உதய சூரியனைப் பெறுதற்கு முன்வருக எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

உதயசூரியனின் அமைப்புமுறை, அணுகுமுறை வெப்பதட்பங்கள் முதலியன பற்றி அன்பர்கள் ஆர்வத்துடன் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். எல்லோருடைய எண்ணங்களையும் கருத்துக்களையும் வரவேற்கிறோம்.

உதயசூரியன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏடு; ஒரு மாபெரும் விடுதலை இயக்கத்தின் ஏடு; தமிழ் ஈழத்தை மீட்டுத் தமிழ் அரசை — தனி அரசை — நாட்டுவதையே தலையான குறிக்கோளாகக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏடு. இந்தக் குறிக்கோளை—நோக்கத்தை—தமிழ் மக்களின் இதய தாகத்தை — தமிழ் ஈழமக்களின் ஆணையை நிறைவேற்றுதற்கு அஞ்சாமலும்—அசையாமலும், தயங்காமலும்—தளராமலும் உதயசூரியன் ஏடு உழைக்கும்,

விடுதலைப் பாதையில் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் குறுக்கிடுகின்றஅரசியல் பச்சோந்திகளை—புல்லுருவிகளை—கூட்டணியிலிருந்து ஒழிபறிப்போரை—முதுகில் குத்துவோரை—ஐந்தாம் படையினரை—சிங்கள ஏகாதிபத்தியங்களின் கைக்கூலிகளை உதயசூரியனின் கதிர்கள் ஈவுஇரக்கமின்றிச்சாடும், எங்கள் ஏடு சிங்கள ஏகாதிபத்தியங்களின் அடக்குமுறைகளையும் பொய்ப்பிரசாரங்களையும் அம்பலப்படுத்தித் தடுத்து நிறுத்தமுயலும்.

விடுதலையைப்பெற அயராது அல்லும் பகலும் உழைக்கும் தொண்டர்களுக்கும் அவர்களுக்கு ஆதரவு நல்குவோருக்கும் எப்பொழுதும் எந்நிலைமையிலும் உதய சூரியன் முழு மூச்சுடன் கைகொடுக்கும்; கடமை — கண்ணியம்—கட்டுப்பாட்டைக் கைவிடாது, உண்மை—உழைப்பு —உறுதியை ஊக்கும். ''தாயின் மேல் ஆணை எம் தந்தைமேல் ஆணை தமிழரின் ஆட்சியை நாட்டுவோம் எம் நாட்டில்''

## ஆசிரியர் பேசுகிறார்

மட்டக்களப்பு மண்ணில் —

நிறைவான ஒரு பல்கலைக் கழகத்தை

# நெஞ்சார வரவேற்கிறோம்!

-தலைவர் அமிர்

**மட்டக்களப்பு மண்ணில் பல்கலைக்கழகம் நிறுவுவது சம்பந்தமாக பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட துணை மானியப் பிரேரணை மீது எதிர்க்கட்சி முதல்வர் உயர்திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. பேசுகையில் கூறியதாவது:-**

மட்டக்களப்பில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். அங்கே அமைக்கப்படும் பல்கலைக்கழகம் ஒரு பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகமாக, இலங்கையின் ஏனைய பாகங்களில் அமைக்கப்பட்டிருக்கும் பல்கலைக்கழகங்களுக்கு எந்தவகையிலும் தரம் குறையாத பல்கலைக் கழகமாக அமைக்கப்பட வேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன் என்று குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் —

இலங்கையின் வேறு சில பாகங்களில் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்படும் போது கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்பட்டுக் கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே வேறு சில பல்கலைக் கழகங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை நாம் கவனித்தால் அவை கோடிக் கணக்கில் இருப்பதை காணலாம். ஆனால், மட்டக்களப்பில் அமைக்கப்பட இருக்கின்ற பல்கலைக்கழகத்திற்காகஅங்கே கடந்த காலத்தில் நிறுவப்பட்டிருந்த ஒரு மத்திய மகா வித்தியாலயக் கட்டடத்தை அரசாங்கம் பொறுப்பு எடுத்து அதிலே திருத்தங்களைச் செய்தது. அதைக்கொண்டு ஒரு பல்கலைக்கழகத்தை மட்டக்களப்பில் அமைத்து விட்டோம் என்று திருப்தி அடைவதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக மாட்டாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்டவிரும்புகிறேன்.

இந்த மானியப் பிரேரணை மூலம் 43 இலட்சம் ரூபாவில் 15 இலட்சம் ரூபா இப்போது இருக்கும் கட்டடங்களைத் திருத்துவதற்குச் செலவிடப்படும் என்று கூறினார். இப்போது இருக்கின்ற கட்டடம் எந்த வகையிலும் ஒரு பல்கலைக்கழகத்திற்குப் போதியது அல்ல இந்தக் கட்டடத்தை நாம் பல முறைகள் பார்த்திருக்கிறோம். இலங்கையிலே ஏனைய பாகங்களில் அமைக்கப்படுகின்ற பல்கலைக்கழகக் கட்டடங்களோடு ஒப்பிடும் போது இது மிகவும் கேவலமான ஒரு கட்டடமாக இருக்கின்றது என்பதை நாம் கவனிக்கக் கூடியதாக இருக்கின்றது.

கிழக்கு மாகாணத்திற்குப் பூரணத்துவம் பெற்ற ஒரு பல்கலைக்கழக வேண்டும் கிழக்கு மாகாணத்தை ஒரு வறிய உறவினரை நடத்துவதைப்போல நடத்தும் நிலையை நாம் நிச்சயமாக அனுமதிக்க முடியாது, 43 இலட்ச ரூபா ஒரு பல்கலைக் கழக கட்டடங்களுக்குஒதுக்குவதென்பது 'யானைப் பசிக்குச் சோளப்பொரி' கொடுத்தது போல இருக்கும் என்பதை நான் சுட்டிகாட்டக்கடமைப் பட்டவனாக இருக்கிறேன். இதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் இங்கு ஒதுக்கப்பட்ட பணம் போதாது. இன்னும் கூடிய பணத்தை ஒதுக்கிச் சிறந்தகட்டடங்களைஅமைத்து மட்டக்களப்புப் பல்கலைக்கழகத்தை ஒரு முன் மாதிரியான பல்கலைக்கழகமாக விளங்கச் செய்ய வேண்டும்.

மட்டக்களப்பு இந்த நாட்டிலே பல்வேறு துறைகளில் தலைசிறந்தபல அறிஞர்களை உருவாக்கி இருக்கின்றது. நான் நேற்றைய தினம் இந்தியாவிலே தமிழ் நாட்டில்நின்ற போது அங்கு ஒரு இசைப் புலவரோடு உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. யாழ் நூலை ஆக்கிய சுவாமி விபுலானந்த அடிகளாரின் ஆராய்ச்சித் திறனை அந்த இசைப் புலவர் மிகவும் வியந்து பாராட்டினார். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு இருந்த யாழை அவர் தமது திறமையால் மறுபடியும் உருவாக்கிக் கொடுத்ததை இந்த இசை நூல்அறிஞர் பாராட்டியபோது நான் மிகவும் பெருமைப்பட்டேன். இப்படியாகளத்தனையோஆராய்ச்சியாளர்களை அறிஞர்களை உருவாக்கக்கூடிய பல்கலைக்கழகமாக மட்டக்களப்புப் பல்கலைக் கழகம்விளங்கவேண்டும். அதற்கேற்ற வகையில் கட்டடங்களும் வாய்ப்புக்களும் அந்தப் பகுதி மாணவர்களுக்குஆக்கிக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் வற்புறுத்திக் கூறவிரும்புகிறேன்.

# அமைச்சர்களின் பரிசு அரைகுறை தானு ?

— பட்டிருப்பு கணேசலிங்கம், பா. உ. கேள்வி

மட்டக்களப்பு மண்ணில் பல்கலைக்கழகம் நிறுவுவது சம்பந்தமாக பட்டிருப்பு பா.உ. திரு. பூ. கணேசலிங்கம் பாராளுமன்றத்தில் பேசும் போது கூறியதாவது—

மட்டக்களப்பில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான தீர்மானம் கடந்த இரண்டாண்டுகளாக இருந்து வருகின்றது: இவ்வாண்டு ஐப்பசி மாதம் 1ம் திகதி மேற்படி பல்கலைக்கழகம் அமைக்கப்படுமென்று அமைச்சரினுல் இந்த சபையில் உறுதி அளிக்கப்பட்டது ஆனுல்— பிரதம மந்திரி அவர்களால் கொண்டுவரப்பட்ட குறைநிரப்பு பிரேரணை பல்கலைக்கழகம் அமைப்பதற்கு வேண்டிய பண ஒதுக்கீட்டையே இப்போது கேட்கப்பட்டுள்ளதுபோல் தோன்றுகிறது. எனவே ஐப்பசிமாதம் 1ம் திகதி பல்கலைக்கழகம் அமைக்கப்படுமா? அல்லது வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயம் புதுப்பிக்கப் பட்டபிறகா என்று நான் திட்டவட்டமாக அறிய விரும்புகின்றேன்.

இது விடயமாகக் கடந்த சில மாதங்களாக ஓர் இணைப்பு அதிகாரியும் பல்கலைக்கழக விரிவுரையாளரும் பணியாற்றுகின்றார்கள். அவர் மட்டக்களப்பில் இருந்து கடமையாற்றுகிறார். எனினும் வந்தாறுமூலையில் தனது அலுவலகத்தை இன்னும் அவர் திறக்கவில்லை,

இதற்காக (பல்கலைக்கழகம் நிறுவுவதற்காக) தற்போதுள்ள மத்திய மகாவித்தியாலயத்தைச் சிற்றாண்டிக்கு மாற்றும் திட்டம் உள்ளது. வந்தாறுமூலை மகா வித்தியாலயத்தில் விடுதி வசதி உண்டு மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் பெருந்தொகையானோர் இந்தக் கல்லூரிக்குச் செல்கின்றனர். சிற்றாண்டியில் உள்ள தற்காலிகமான ஒரு கட்டடத்திற்கு இக்கல்லூரியை மாற்றுவதின் மூலம் இங்கே பயிலும் மாணவர்கள் தங்கள் கல்வியைத் தொடரும் வாய்ப்பை இழக்கச் செய்கின்றீர்கள் இதனுல் இவ்விஷயத்தையிட்டுக் கவனம் செலுத்தும்படி பிரதமரை க்கேட்டுக்கொள்கிறேன் இதனுடன் பல்கலைக்கழகம் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதற்கான உறுதிமொழியையும் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றேன்,

# தமிழீழம் உருவாக தருணம் தந்ததோர் வாய்ப்பு!

**அண்மையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவர்களில் ஒருவரான திரு. ரி. பி. இலங்கரத்தின அவர்களின் தலைமையில், கட்சித் தலைமையலுவலகத்தில் 'மாவட்ட அபிவிருத்திச் சபைச்சட்டம்' எனும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் சட்டத்தரணி திரு. வி. டபிள்யூ. குலரத்ன அவர்கள் ஆற்றிய உரையை சிங்களப்பத்திரிகையான 'தினகர' 6·10-80ல் வெளியிட்டிருந்தது. அதனையே நாம் இங்கே தமிழாக்கித் தருகின்றோம்.**

## அபிவிருத்திச்சபை குறித்து அங்கலாய்க்கிறார் குலரத்ன

ஐக்கியதேசியக்கட்சியின் 1977ஆம் ஆண்டின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எந்த ஒரு இடத்திலும்குறிப்பிடப்படாத மாவட்ட அபிவிருத்திச்சபைச் சட்டம் ஒன்றை ஏற்படுத்திய தன்மூலம், இன்றைய அரசாங்கம் நாட்டை இரு கூறுகளாக மாத்திரம் பிரிக்கவில்லை. நாட்டைப் பல கூறுகளாகப் பிரித்துள்ளது என்றும், அரசகரும மொழிச் சட்டத்தை வலுவிழக்கச் செய்து.இலவசக் கல்வி முறையைச் சீர்குலையச் செய்து பௌத்த மதத்தை கலாசாரத்தை அழித்து நாட்டில் இருக்கக்கூடிய இயற்கை வளங்களை வெளிநாட்டுச்செல்வந்தர்களுக்கு குறைந்த விலைக்கு விற்பதும் இந்தச் சட்டத்தின் மிகவும் பயங்கரமான குறிக்கோள், ஈழ அரசொன்றுக்கு கதவுகளைத்திறப்பதாகவும் அமையும் என்றுசட்டத்தரணி திரு.வி. டபிள்யூ. குலரத்ன மாவட்ட அபிவிருத்திச்சபை சட்டம் என்ற தலைப்பில் ஆற்றிய உரையின்போது குறிப்பிட்டார்.

ஸ்ரீ. ல. சு, கட்சியின் கொழும்பு 1, மாவட்ட அமைப்பின் பிரசாரஉபகுழுவினால் ஸ்ரீ.ல.சு. கட்சியின் தலைமை அலுவலகத்தில் கட்சியின் உபதலைவர்களுள் ஒருவரான திரு. ரி.பி. இலங்கரத்தின அவர்களின் தலைமையில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த கருத்தரங்கொன்றிலேயே இவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

முன்னாள் பிரதம நீதியரசர் விக்டர் தென்னக்கோன் அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட ஆணைக்குழு ஒன்றின் விதப்புரையின் மீது இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டது என அரசாங்கம் கூறியபோதிலும், அந்த ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராக இருந்த திரு. நீலன் திருச்செல்வம் அவர்கள் அந்த அறிக்கைக்கு கையெழுத்திட வில்லையென்றும் அவரால் சமர்ப்பிக்கப்பட்ட புறம்பான அறிக்கையிலிருந்து 95 வீதமான ஆலோசனைகள் இந்தச்சட்டத்தினுள் சேர்க்கப் பட்டிருப்பதாகவும் தெளிவுபடுத்திய திரு. குலரத்ன, ஈழம்பெற முடியாவிட்டாலும் எங்களுடைய பிரதேசத்தை நாம் பாதுகாத்துக் கொண்டோம் என யாழ்ப்பாணத்தில் எதிர்க்கட்சித்தலைவர் ஆற்றிய உரையிலிருந்து இது உறுதிப்படுத்தப் பட்டுள்ளதெனவும் குறிப்பிட்டார். ஸ்ரீ. ல.சு. கட்சி இனவாதத்தைக் கிளப்பிவிடுகின்றது என உலகுக்கு எடுத்துக்கூற வேண்டிய நோக்கத்துடன் ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட சன்சோனி ஆணைக்குழுவின் அறிக்கையை இன்னும் வெளியிடாமல் இருப்பது ஏன் என்று கேள்வி எழுப்பிய திரு. குலரத்தின அந்த அறிக்கையை வெளியிட்டால் ஸ்ரீ.ல.சு. கட்சி இனவாதத்தைக் கிளப்புகின்ற கட்சி அல்ல என்பது தெளிவாகின்ற படியினாலும் இந்நாட்டில்தேசிய ஒற்றுமையை உறுதிப்படுத்துவதற்கு நாட்டை இருகூறுகளாக்குவது பரிகாரம் அல்ல என்று அந்த அறிக்கையிலே விதந்துரைக்கப்பட்டிருப்பதனாலும். அதன் மூலம் மாவட்ட சபை சட்டத்துக்கு இடையூறு ஏற்படுவதனாலும் அரசாங்கம் இரண்டரைவருட காலமாக சாட்சியங்களை விசாரித்து உருவாக்கிய சன்சோனி ஆணைக்குழுவின் அறிக்கையை ஒழித்து வைத்திருக்கிறது என்றும் குறிப்பிட்டார். வரலாற்று ஆசிரியர்கள் கூறுவதைப் போன்று கடந்த காலத்தில் இருந்து நிலவி வந்த கிராம சபை முறைக்கு எந்தவிதத்திலும் ஊறு ஏற்படாத விதத்திலே உருவாக்கப்பட்டிருந்த மாவட்டசபை சட்டமூலம் கூட காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவினால் வாபஸ் வாங்கப்பட்டதற்கான காரணம், இந்நாட்டிலே பௌத்த பிக்குகளும், ஏனைய ஸ்தாபனங்களும் நாட்டில் ஆரம்பித்த எதிர்ப்பியக்கத்தினாலாகும் என்று அவர் எடுத்துக்காட்டினார், அன்று அந்தச் சட்டத்துக்கு எதிராக தலதா மாளிகையிலேவிழுந்து வணங்கி நாட்டைக் காப்பாற்றுவதற்காகக்கண்டிக்குநடந்து சென்றஜே, ஆர். ஜெயவர்த்தன, பிரேமதாசா தம்பதிகள் இன்று, தாங்கள் என்னசெய்கிறார்கள் என்பதைத் தங்களுடைய மனச்சாட்சியிடம் தட்டிக் கேட்பார்களேயானால் "நாட்டையும் நாட்டு மக்களையும் ஏமாற்றுதல்" என்னும் பதிலே நிச்சயம் கிடைக்கும் என்று திரு, குலரத்ன கூறினார். இந்த அபிவிருத்திச்சபை சட்டமூலம் மிகவும் அவசரமானதொன்றென அவசரகாலச் சட்டமும், பத்திரிகைத் தணிக்கையும் இருந்தபொழுது பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்து அங்கீகரித்துக் கொண்டமைக்கு ஏதோ ஒரு உள் இரகசியம் இருக்கின்றது எனக் குறிப்பிட்ட திரு. குலரத்ன, சட்டத்தின் ஒரு வாசகத்திலே இருக்கின்ற வருமானவரி அறவிடுதல் அரசியல் அமைப்புக்கு முரணானது என மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் எடுத்துக் காட்டப்பட்டும், சட்டமூலத்துக்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின். மக்கள் தீர்ப்புப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென பொதுமக்களின் இயக்கங்கள் கேட்டுக்கொண்ட போதிலும்' அரசாங்கம் அதைக் கவனத்துக்கெடுத்துக் கொள்ளவில்லை' நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் குழு நிலையின்போது திருத்தங்களைக் கொண்டுவந்து அதைத்திருத்திக்கொண்டோம் என அரசாங்கம் கூறுகின்ற போதிலும், செய்யப்பட்ட திருத்தங்கள் நாட்டின்சட்டத்துடன் ஒத்துப்போகின்றனவா என்று மீண்டும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம், விசாரிக்கவில்லை என கூறிய திரு. குலரத்தின, ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு எதிராக திருமதி பண்டாரநாயக்கா அவர்கள் நீதிமன்றக் கட்டளை ஒன்றைப் பெற்ற சந்தர்ப்பத்திலும் கூட, அதனையும் மாற்றி அமைப்பதற்கு பாராளுமன்றத்திற்குத் திருத்தங்களைக் கொண்டுவந்த விதம் பற்றி எடுத்துக்காட்டினார் அவர், ஒரு மாவட்டத்துக்கு இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட குறைவான அளவு பிரதிநிதிகளை அபிவிருத்திச்சபைகளுக்கு தேர்ந்தெடுப்பதில் இருக்கின்ற ஜனநாயக கோட்பாடு என்னவென்று கேள்விஎழுப்பிய அவர், மாவட்ட சபைத் தலைவருக்கும் நிறைவேற்றுச்சபைத் தலைவருக்கும் இடையில் பிரச்சினைகள் ஏற்படும்பொழுது அபிவிருத்திச்சபைகளைக் கலைக்கும் அதிகாரத்தைத் தன்னிடம் வைத்துக்கொள்வதன் மூலம் ஜனாதிபதியின் சர்வாதிகாரம் மிகத்தெளிவாகத் தெரிகின்ற

7—ஆம் பக்கம் பார்க்க

# யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் யார்?

## பொதுமக்கள் கேட்கும் பொருளுள்ள கேள்வி!

யாழ்ப்பாண மாவட்டத்தின் அமைச்சர் யார் எனும் கேள்வியை விடயம் அறிந்த வட்டாரங்கள் இப்பொழுது எழுப்புகின்றன. திரு. யோகேந்திரா துரைசுவாமிதான் யாழ்ப்பாண மாவட்ட அமைச்சரின் கடமைகளைச் செய்கின்றாராம். மாவட்ட அமைச்சர் என்ற முறையில் திரு. யு. பி. விசயகோன் பெயரளவில்தான் இயங்குகிறாராம்.

ஏனைய மாவட்டங்களில் மாவட்ட அமைச்சர்களே அம் மாவட்டங்களில் நடைபெறும் அரசாங்க நியமனங்களுக்கு பொறுப்பாய் இருக்கிறார்கள். ஆனால், யாழ்ப்பாணத்தில் திரு.யோகேந்திரா துரைசுவாமியே பொறுப்பாய் இருக்கிறார். யாழ் கச்சேரியில் மாவட்ட அமைச்சின் அலுவலகப் பகுதியில் உத்தியோகம் சம்பந்தமாகச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்என்றஅறிவுறுத்தல்காணப்படுகிறது.

அமைச்சர்கள்யாழ்ப்பாணத்துக்கு வரும்போதுதான் யாழ் மாவட்ட அமைச்சர் கச்சேரிக்கு வருகிறார் எனவும் கூறப்படுகிறது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் மாவட்ட அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் செய்யும் முடிவுகளிலே மாவட்ட அமைச்சரின் அதிகாரத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமல் யோகேந்திராதுரைசுவாமி மாற்றங்களை செய்கிறாராம்.

யாழ் மாவட்ட அமைச்சர் செய்த முடிவு ஒன்றை அவரைக்கொண்டே மாற்றுவித்து ஒரு சபைக்குக் கடிதம் எழுதுவித்துத் தாம் விரும்பியவாறு யோகேந்திரா செய்வித்திருக்கிறார். மாவட்ட அமைச்சரை திரு. யோகேந்திரா துரைசுவாமியே அடக்கி ஆளுகிறார் என்பதையே இது குறிக்கின்றது எனவும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு முதலில் நியமிக்கப்பட்ட மாவட்டஅமைச்சருக்கு நேர்ந்த கதியே இப்பொழுதுள்ள மாவட்ட அமைச்சருக்கும் நிகழலாம் எனவும் பேசிக்கொள்ளப்படுகிறது,

மாவட்ட அமைச்சரை மக்கள் பெரும்பாலும் வரவேற்பதில்லை அவருடைய செயலாளர் யோகேந்திராதுரை சுவாமிக்கே வரவேற்புகள் கொடுக்கப்படுகின்றன. மாவட்ட அமைச்சின் அதிகாரம் யோகேந்திராதுரை சுவாமியிடம் இருப்பதாலேதான் இவ்வாறு நடக்கின்றது எனவும் கூறப்படுகின்றது.

அன்றியும் அரசியல் பச்சோந்திகளும் அரசியல் புல்லுருவிகளும் யோகேந்திராதுரைசுவாமியைச் சுற்றித்திரிவதும் அவரிடம்தான் மாவட்ட அமைச்சரின் அதிகாரம் இருக்கின்றது என்பதையும் காட்டுகின்றது. திரு,யோகேந்திரா துரைசுவாமி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் "ஏஜென்ற்" நான் தான் என்று கூறி வருவதும் இதைப்புலப்படுத்தச் சுற்றறிக்கை விடுவதும் குறிப்பிடத்தக்கன.

# தினபதியின் திசையில் சுதந்திரனும் திரும்புகிறது?

# சுதந்திரன் ஆசிரியருக்கு டானியல் ரேச் சுடச்சுட உபதேசம்

**மன்னர் எம். டானியல் ரேச் அவர்கள் தந்தை செல்வாவிடமும் அவருடைய சுதந்திரனிலும் அளவிலாத பற்றும் பாசமும்கொண்ட பழம் பெரும் அரசியல்வாதி- சுதந்திரனின் கோடிதவத்தைக் கெடுக்கும் கொடிய பாவச் செயல்கண்டு உள்ளம் கொதித்து அவர் சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசனுக்கு அன்புரிமையால் எழுதிய கடிதத்தைஅவர் கேட்டுக்கொண்டபடி வெளியிடுகிறோம்.**

அன்புத் தம்பி,

உங்களுக்குள் ஏற்பட்ட உள் வீட்டுப் போராட்டங்களை நோக்கும்போது இதுதானு அரசியல்? கேடு கெட்ட இந்த அரசியலில் நாமேன் ஈடுபடுவான் என்ற வெறுப்புத்தான் மேலாடுகின்றது. இந்த அரசியலிலிருந்து எம் போன்றேர் ஒதுங்க எண்ணிஞலும் உம் போன்றேர் விடமாட்டீர்கள் என்பது தெரியும். என்ருலும் இந்த வேளையில் எனது எண்ணங்களையும் சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன்.

அமரர் வன்னியனுர், தந்தை செல்வா என்போர் நம் போன்ற பல கோடித் தமிழர்களின் நெஞ்சங்களில் குடிகொண்டதுபோல அவர்கள் காலந்தொட்டு நம்மத்தியில் உயிருடன் வாழும் கௌரவ அமிர்தலிங்கம் போன்றேரும் நம் இதயங்களில் குடியிருக்கிருர்கள்.

## தினபதியின் திசையில்!

ஆனுல், இப்போது ஏற்பட்ட அபிப்பிராய பேதங்களால் அவர்களைக் கண்டபடி தூற்றுகின்றீர்கள். சுதந்திரனிலும் வசைபாடத்துவங்கி விட்டீர்கள். ‘கேடு கெட்ட தமிழினமே உனக்கேன் தமிழீழம்?’ என்றும்—எவருக்கோ கவிஞர் ‘வயிறுடையான்’ என்று பாடியதை (சுதந்திரன் 21.9.80) இப்போது இவர்களுக்கு ஒப்படைக்கப்பார்க்கிறீர்கள்.

இவை போன்றவற்றைச் சுதந்திரனில் படிக்கும்போது எம்போன்றேர்க்குச் சுதந்திரன் இதழில் இவ்வளவு காலமாக இருந்த பற்றும் பாசமும் குறைய வேதனையும் வெறுப்பும் வளருகிறது. தினபதியாரின் திசையில் சுதந்திரனும் திரும்புவதுபோல் தோன்றுகிறது இதுசரியா? அழகா?

இப்போதுள்ள தலைவர்களோடு கால் நூற்றுண்டுகளுக்கு மேல் நம்பிக்கையோடு பழகினேம். நம்பிக்கையாகவே நடக்கிருர்கள். நீங்களும் சரிபோட்டு வந்தீர்கள். அவர்களிலுள்ள மதிப்பும் நம்பிக்கையும் கால் வருட எதிர்ப்பால் அழியப்போவதில்லை. சொல்லுவார் சொன்னுலும் கேட்பவர்க்கும் மதி உண்டு அல்லவா?

## தூபம் காட்டலாமா?

எனவே, சிறிது காலத்துக்காவது இது பற்றிப்பேசாமலும் எழுதாமலும் அமைதியாயிருப்பது நன்று. அதன் பின் சரிபிழை தெரியுந்தானே! அதற்கிடையில் யார் எவர் என்று தெரியாதவர்கள் சட்டிதாளிப்பது மட்டுமல்ல, தங்கள் வீரப்பிரதாபங்களைக் காட்டப்போலும் சீவிய காலம் மட்டும் தேசத்துக்காகப்பாடுபட்ட மகாத்மாவை எங்கோ கிடந்த கோட்சே சுட்டது போல், தலைவர் அமிர்தலிங்கத்தின் கொடும்பாவியைச் சுட்டுக்காட்டுகிருர்கள். இதெல்லாம் பண்புடையோர் செயலாகுமா இப்படிப்பட்டவர்களுக்கு நீங்களும் தூபம் காட்டலாமா?

நீங்கள் தலைவர்களுக்கெதிரான பாடல்களையும மேற்கோள்களையும் தேடி எடுத்துப் பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டுமிருக்க அவர்களும் அதற்கெதிரானதைத் தேடி எடுத்துப் பதில் கூறிக்கொண்டிருக்க இதிலே இருபாலாரும் சிந்தனையைச் செலுத்திக் கொண்டு காலம் கழிக்க இரண்டு வருடத்தில் கிடைக்க வேண்டிய ஈழம் இன்னும் இருபது வருடங்களுக்கு இழுத்துக் கொண்டு போகாதா? தமிழ் ஈழத்தை எதிர்நோக்கியே அவர்களும் செயற்படுகிருர்கள். பக்கத்துத் தமிழ் நாட்டு வியாதி ஈழநாட்டிற்கும் வர வேண்டுமா?

இன்று தமிழ் ஈழத்தைச்சிங்களமயமாக்கிக் கொண்டிருக்கும் வேகத்தைத் தடுத்துக் கொண்டிருப்பதும் அவர்களல்லவா? மாவட்ட அமைச்சர் பதவிகளை ஏன்மறுத்தார்கள்? மாவட்ட மந்திரிகள் ஈழத்தில் நடத்தும் கூத்துக்கள் இப்போது தெரிகிறதல்லவா? மாவட்ட சபையையும் விட்டால் தமிழ் ஈழம் முழுவதும் சிங்களக் குடியேற்றமும் சிங்களப் பாடசாலைகளும் புத்த கோவில்களும் தீவிரமாய் இடம்பெற்றுவிட பலஸ்தீனியர் போல தமிழர் நிலைமையும் ஆகாதா?

## நீங்களே போராடலாமே

உடனே அரசை எதிர்த்துப் போராட வேண்டுமென்று வசைபாடுவோரும் கொடும்பாவி கொளுத்துவோரும் தலைவர்களுக்குஅமையாமல் எதிர்க்கின்றீர்கள். தலைவர்களை எதிர்பாராமலே நீங்கள் அரசையும் எதிர்க்கலாமே!

இப்போதே அரசை எதிர்த்துப் போராட எத்தனைபேர் தயாராயிருக்கிருர்கள்? என்னென்ன ஆயுதங்களுண்டு? அப்படியான பலம் இருந்தால் மதிப்புக்குரிய தமிழ்த்தலைவர்களை எதிர்ப்பதைவிட்டு விட்டு அரசை எதிர்ப்பதில் உங்கள் சக்தியைப்பயன்படுத்தலாமே! இதில் உங்கள் நிலைமை சரியாயிருந்தால் தலைவர்களும் உங்கள் பக்கம் திரும்புவார்கள் தானே!

## பாதையை மாற்றுங்கள்

உங்கள் எதிர்ப்பு— ‘தெய்வ கடாட்சத்தால்’ தமிழ் ஈழம் கிடைத்தாலும் அதன் பின்பும் உள்நாட்டுக் குழப்பங்களை உண்டாக்க இருக்கிறேம் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

தமிழ்ஈழத்தைஎப்படி அடையலாமென்று உங்களுக்குத் தெரிந்த அளவு தானும் தலைவர்களுக்குத் தெரியாமலா இப்படி நடக்கிருர்கள்? மாவட்ட மந்திரி பதவியைப் பற்றி நன்கு ஆராய்ந்த பின்பே அதைக் கைவிட்டது போல அபிவிருத்திச் சபையையும் எடுத்த எடுப்பிலே ஏற்காது பலநாட்கள் ஆராய்ந்துபொது சபையின் அனுமதியுடனேஏற்றூர்கள்.

அவ்விதம் செய்த முடிவை மாறுபட்ட கருத்துடைய உங்களில் சிலர் பொதுச்சபையின் தீர்மானம் உங்களுக்கெதிரானதென்று ஏதேதோ கூறி எதிர்ப்பதும், குழப்புவதும் குதர்க்க மாடுவதும் முறையான தென்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

அகம்பாவம் கோடி தவத்தைக்
கெடுத்ததாம்
ஒரு துளிவிடம் ஒருகுடம்
பாலைக் கெடுத்ததாம்

இவ்வளவு வருடங்களாக நீங்கள்பட்ட கஸ்டங்கள்— எழுதியஎழுத்துக்கள் அந்தோ! எல்லாம் தவிடு பொடியாகவா இந்த வேலையைத் தொடங்கினீர்கள்?

தயவு செய்து தங்களது தற்போதைய பாதையை மாற்றுங்கள். இது என் அன்பான வேண்டுகோள்.

★

# தலைமையைக் கைப்பற்ற தம்பியர் சிலர் சூழ்ச்சி!

தமிழர் விடுதலைக்கூட்டணி சனநாயக முறையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. 400க்கு மேற்பட்ட மூலக்கிளைகளையும் அக்கிளைகளின் பிரதிநிதிகளையும் கொண்ட தொகுதிக் கிளைகளையும், தொகுதிக் கிளைகளால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட பொதுச்சபையினையும், பொதுச்சபையினுல் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களையும், மத்திய செயற்குழுவையும் கொண்டது அது. இந்தத் தமிழர் விடுதலை கோட்டைக்குள் இலகுவில் புகுந்து தலைமைப்பீடத்தைக் கைப்பற்ற முடியாது என்பதை அறிந்த சிலர் தலைமைப்பீடத்தை தூக்கி எறிந்து குறுக்கு வழியில் தலைவர்களாவதற்கு இரட்டையர்களையும், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் சிலரையும் சுதந்திரனையும் பயன்படுத்துகின்றனர்.

“தமிழ் இனத்தை அமிர் மறந்துவிட்டார்; தலைவனுக்குரிய அம்சங்கள் இருப்பினும் அவரை அகற்ற வேண்டும் என்கிருர் ஈழவேந்தன்” எனுந் தலைப்புக்களுடன் தமிழ் மக்களைத் திடுக்கிடச்செய்யும் சூழ்ச்சியை ஈழ நாடு 22-7-80 இல் அம்பலப்படுத்திற்று. ‘கட்சியின் கட்டுப்பாட்டை மீறிய தாகக்குற்றம் சுமத்தப்பட்டுக் கட்சியின் மத்திய செயற்குழுவினுல் கூட்டணியில் இருந்து இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ள ஈழவேந்தன் நமது நிருபரிடம் திரு. அமிர்தலிங்கம் தலைமைப் பதவியில் இருந்து விலக்கப்படவேண்டும் என்று மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்” என்றும் ஈழநாடு எழுதிற்று.

“அரசியல் தலைவர் ஒருவரின் மைந்தனின் அனுசரணையுடன் தலைமைப் பதவியில் வேருெருவரை அமர்த்தச் சிலர் விரும்புகிருர்கள்” என்றும் ஈழநாடு வெளிப்படையாக சுதந்திரன் செய்யும் சதியை அன்றே மக்கள் முன் வைத்தது.

இந்தச் செய்தியை திரு. ஈழவேந்தன் அடுத்த நாள் மறுப்பதுபோல மழுப்பினுர். எனினும், அவரால் உண்மையை மறைக்கமுடியவில்லை. அதே ஈழவேந்தன் இந்த உண்மையை மீண்டும் 17-9-80இல் தமது பேச்சில் தமது ஆசையுடன் கலந்துவெளியிட்டார். அவரின் பேச்சைப்படித்துப் பாருங்கள்.

“எங்கள் தலைவர்களும் ‘தம்பிவா தலைமை தாங்கு’ என வாலிபர்களைத் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்த வேண்டும். வேகமாக ஓட முடியாதநிலையில் அவர்கள் உண்மையை உணர்ந்து தலைமைப் பொறுப்பை இளைஞர் கையில் ஒப்படைப்பது புத்திசாலித்தனமானது.

(19.9.80 வீரகேசரி)

பாராளுமன்ற உறுப்பினரின் சிபார்சினுல் தற்செயலாகப் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பதவிபெற்ற ஒருவரின் பேச்சுக் கூலிப்பேச்சா? கொள்கைப் பேச்சா என்பதை, நீங்களேதீர்மானித்துக்கொள்ளுங்கள்! வீரகேசரிஅவருடையபேச்சைப் பின்வருமாறு வெளியிட்டுள்ளது;

—7-ம்- பக்கம் பார்க்க

# சாயங்கால மயக்கம்

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பிதாமகர்— காலம் சென்ற பிரதமர்— பண்டாரநாயக்காவின் நினைவுநாளை ஒட்டி கண்டி போகம்பரை மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா புயலாகவே சீறியிருக்கின்றார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சியை அழிக்கும்வரை அயரமாட்டேன் என அவர் அல்லிராணியாகவே ஆர்ப்பரித்திருக்கின்றார்.

பெண்மணி சிறீமாவின் இந்தப் பீரங்கிப் பேச்சுக்குக் காரணம் என்ன?

அம்மையாரின் ஆட்சிக்காலத் 'தர்பார்களை' ஆராய்ந்த சனாதிபதியின் விசேட ஆணைக்குழு— அவர் தமது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக அறிவித்திருக்கின்றது!

அவரது அருமை மருமகன் திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்காவோ— அதிகார துஷ்பிரயோகம் மட்டுமல்ல— அருவருக்கத்தக்க ஊழலும் புரிந்திருப்பதாகக் கூறுகின்றது அதே அறிக்கை!

இதன் காரணமாக—

இருவரினதும் குடியியல் உரிமைகளை இரத்துச் செய்ய வேண்டுமென ஆணைக்குழு சிபார்சு செய்திருக்கின்றது-

சிறிமாவின் சீற்றத்திற்கு இந்தச் சிபார்சு தான் காரணமென்று நாம் சொல்லத் தேவையில்லை.

கௌதம புத்தரின் போதனைகளைக் கண்ணைப் போற்றுவோம் என மூச்சுக்கு முந்நூறு தடவை முழங்குகின்றார்கள் ஆட்சித் தலைவர் ஜே. ஆரும் அவரது அத்தியந்த சீடர் பிரதமர் பிரேமதாசாவும்! ஆனால்—

**அவர்களின் அரியாசனமோ அநியாயம் என்ற மேடையில்தான் அலங்காரமாக அமைக்கப்பட்டிருக்கிறது.**

சர்வாதிகாரம் என்ற குடை நிழலில் அமர்ந்து சிறிலங்கா சாம்ராச்சியத்தை ஆண்டுவரும் ஜே- ஆரும் அவரது பாளையக்காரப் பரிவாரங்களும் தமிழ் ஈழத்தில் தமிழர்களை அடக்கி ஒடுக்கச் செய்யும் தந்திரங்களை உலகமே அறிந்திருக்கிறது. அத்தகைய பெருந்தகையாளரின் ஆட்சிதான் அம்மையாரின் அடிப்படை உரிமைகளை அபகரிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிகிது. நாம் ஆச்சரியப்படவேயில்லை!

சிங்கள நாட்டில் சிறிமாவின் செல்வாக்கை எப்படியாவது சீரழித்து விட்டால்— தமது ஆட்சி சிரஞ்சீவித்துவம் பெற்றுவிடுமென்று ஜே. ஆர். சிந்திக்கின்றாரோ, என்னவோ?

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் அதிபதி இன்று ஆடும் ஆட்டத்தையே அம்மையார் ஒரு காலத்தில் (1970-1977) ஆடி அரங்கேற்றியவர்!

**உரிமை நமக்கு உயிரைவிட உயர்ந்தது**

இப்படிப்பட்ட நாம்-

ஒரு பெண்ணின் குடியியல் உரிமையைப் பறிக்க முயலும் உதவாக்கரை அரசின் திட்டத்திற்கு ஒரு நாளும் உடந்தையாகோம்!

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு பிரதிநிதியை இந்த அரசு எப்படி மதிக்கின்றது என்பதற்கு ஆணைக்குழுவின் சிபார்சைத் தூக்கிக் கொண்டு அது ஆடும் விதத்திலேயே நமக்குப் புரிகின்றது!

பத்திரிகை உரிமையைப் பறித்து மக்களாட்சித் தத்துவத்தை மயானப்படுகுழிக்குள் தள்ளிய அம் மாது சிரோன்மணி இன்று ஜனநாயகத்தின் காவலனாக- சயவர்த்தனாவை எதிர்த்துப் போர்க் கொடி ஏந்திப் புறப்பட்டதே ஒரு புதினம்தான் இப்போதுதான் புத்திவந்திருக்கிறதாக்கும்!

நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது நாம் இழந்துவிட்ட உயிர்களை இதற்குள்ளாகவா மறந்துவிட முடியும்?

அம்மையாரின் ஆட்சி தமிழரின் முதுகில் பதித்துவிட்ட அதர்ம முத்திரைகள் எத்தனையோ- எவ்வளவோ! இருந்தும்-

இனத்தின் விடுதலைக்காகப்போராடிக் கொண்டிருக்கும் ஓர் இயக்கத்தின் சொந்தக்காரர்கள் நாம்.

களத்தைவிட்டு நமது கால்கள் அசையப் போவதில்லை கடைசி வெற்றி கிடைக்கும் வரை!

கண்ணீரும் செந்நீரும் சிந்தி விடுதலைப் பயிரைக் கவனமாகவே வளர்த்துக் கொண்டிருக்கிறோம்!

தொழிலாளர் நல உரிமைகளைத் தோண்டிப் புதைத்துவிட்ட இவ்வரசு-சுகமான ஜனநாயகக் காற்றைச் சுவாசிக்க ஏதுவாக இருக்கும் எதிர்க் கட்சிகளையும் அழித்தொழிக்க எத்தனிக்கின்றது! எனவேதான்-

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியினரின் இந்த அதர்மப்போக்கை நாம் எதிர்க்கின்றோம்; வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அதே நேரத்தில்-
சிறீலங்கா நாட்டின் செல்வாக்குமிக்க இரு பெரும் கட்சித் தலைமைக்கும் சொல்லிக் கொள்வோம்-

**சர்வாதிகாரிகளின் சரித்திரம் நீண்டதல்ல—அதன் சாயங்கால மயக்கத்தில் சஞ்சரித்தவர்கள் ஏராளம்!**

அவர்களோடு உங்களையும் நீங்கள் இணைத்துக் கொள்ள விரும்பினால் அதன் விளைவுகள் பயங்கரமானதாவே இருக்கும்!

**வாகரைவாணன்**

# கூட்டணி வீரர் சிறைக் கூண்டுள் தள்ளப்பட்டார்!

சிங்கள ஏகாதிபத்திய அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு படைபட்டாளம் சூழ உலாவந்தபோது — பந்தல் தோரணம் போட்டு அவரை வரவேற்கப்போன ஆளும் கட்சியின் அடிவருடி ஒருவர் அண்மையில் பரந்தனில் சுட்டுக் கொல்லப்பட்டார் அல்லவா? இந்தக் கொலை தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி கிளிநொச்சித் தொகுதிக் கிளைச் செயலாளர் திரு. கிருஷ்ணராஜா அவர்சள் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் பொலிசார் அவரை நிறுத்தினர்கள். புலன் விசாரணை தொடர்வதாகக் கூறப்பட்டது, கிருஷ்ணராஜாவை புலன்விசாரணை முடியும்வரை சிறைச்சாலையில் வைக்குமாறு நீதிபதி உத்தர விட்டதைத் தொடர்ந்து-இப்போது அவர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் கைதியாக இருந்து வருகிறார்.

கிருஷ்ணராஜாவின் அருமைத் துணைவியாரும் ஏனைய இயக்க நண்பர்களும் சிறைச்சாலை சென்று அவரைச் சந்தித்து ஆறுதல் வர்த்தை கூறினர்

## தமிழீழம் உரு...

—5-ஆம் பக்கத் தொடர்ச்சி

தில்லையா என்றும் கேட்டார், சில சிங்களவர்களின் நன்மைக்காக என புத்தகங்களை எழுதி தேசியவீரர்களாவதற்குமுயற்சித்த சிலரும் இவ்வாறான எம்மைக்காட்டிக் கொடுக்கும்விஷயங்களை அனுமதித்துஉயர்பரீட்சைகளுக்காக எழுதப்பட்ட விடைத்தாள்களை பாராளுமன்றத்திற்கள் கொண்டு வந்து பெரும் வீரர்களாக மாற்றுவதற்கு முயற்சிக்கிறவர்கள் என்றும் பல்வேறு கஸ்டங்களுக்கு மத்தியில் கல்வி கற்கும் ஏழை மாணவர்கள் உயர் பரீட்சைக்காக எழுதப்பட்ட விடைத் தாள்களுக்கு இப்போது புறக்கோட்டைகளில் இருக்கும் நாடார் கடைகளில் தான் புள்ளிகள் வழங்கப்படுகின்றன என்றும், மேற்படி தேசிய வீரர்கள் இன்று பேசா மடந்தைகளாக, மௌனமாக வாழாவிருப்பது ஏன் என்றும் கேள்வி எழுப்பினர், எதிர்காலத்தில் உருவாகும் அரசாங்கத்தினலாவது இந்தப் பயங்கரமான நாட்டைப் பிரிக்கும் சட்டத்தினல் நாட்டுக்கு ஏற்படுகின்ற பாதிப்பை தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது எனவும் திரு. குலரத்ன குறிப்பிட்டார். ஸ்ரீ. ல.சு.கட்சியின் முகத்துவாரக் கிளையைச் சேர்ந்த ஞானபால சிறிமான்னவரவேற்புரை நிகழ்த்த, கொழும்பு மாநகர சபை உறுப்பினர் திரு. ஆர்.ஏ. பியசேன நன்றியுரை வழங்கினார்.

# சிலநேரங்களில்சிலமனிதர்கள்

வவுனியாவைச் சேர்ந்த வசீகரன் என்பவரை வவுனியா மக்கள் நன்கு அறிவர். இவர் ஒரு துடிப்பான இளைஞன். 1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் அடுத்து நடந்த வவுனியா நகராண்மைக் கழகத் தேர்தலிலும், ஐக்கிய தேசிய கட்சி ஒரு தொண்டனாக மேடைகளில் பேசியும் துண்டுப்பிரசுரங்கள் கையெழுத்து இட்டு, அச்சடித்தும், வவுனியாவிலே அரசியல் ஓரளவு பிரபல்லியமானவர் இந்த வசீகரன், இதுவரை இவரது ஐக்கிய தேசியக்கட்சி நண்பர்கள் வசி என அழைப்பர். தேர்தற் காலம் தொட்டு அண்மைக்காலம் வரை பல்வேறு நிகழ்ச்சிகளிலும், நடவடிக்கைகளிலும், ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளருடனும், சகபாடிகளுடனும், பச்சைக் கொடி பிடித்துத்தான் சார்ந்த கட்சிக்கு அருந்தொண்டு ஆற்றியவர்.

சென்றவாரம் வவுனியா பட்டண வீதியிலே இந்த ஐக்கிய தேசியக்கட்சித் தொண்டன் 'உணர்வு' பத்திரிகையைப்பகிரங்கமாக விற்பனை செய்து திரிவதைக் கண்டு வவுனியா வாழ் பொதுமக்கள் ஆச்சரியமடைகின்றனர். வரிக்கு வரி ஐக்கிய தேசியக்கட்சியையும் தமிழர் விடுதலைக் கூட்டணியையும், தாராளமாகக் கண்டிக்கின்ற 'உணர்வு' பத்திரிகையை வசி விற்பனை செய்கின்றாரே! பத்திரிகைக்கு சந்தாக்காரர்களை ஓடி அலைந்துதிரட்டுகின்றாரே! இது என்ன இரட்டைவேடம், என ஆச்சரியத்துடன் சிந்திக்கின்றார்கள்!

பகலெல்லாம் 'உணர்வு' பத்திரிகையை விற்பனை செய்து திரிகின்ற வசி இரவிலே ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளருடனும் சகபாடிகளுடனும், மிகவும் அன்னியொன்னியமாக வழமைபோலக் கூடிக்குலாவுகின்றார், மாவட்ட அபிவிருத்திச்சபையைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரிப்பது தமிழினத்திற்கு செய்கின்றமாபெரும் துரோகமென திடீரென தமிழ் பேசும் மக்கள் மேலும்,

—8-ஆம் பக்கம் பார்க்க

## தலைமையைக்...

6-ஆம் பக்கத் தொடர்ச்சி

"தற்போதைய தலைமை 1977 தேர்தலில் தற்செயலாகக் கிடைத்ததாகவும் இவர்கள் மீது நம்பிக்கை இல்லையென்றும், எல்லோரும் இனத் துரோகிகள் என்றும், எனவே துரோகக் கும்பலை ஒழித்தாக வேண்டும் என்றும் கூறினர்!

வேறொரு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் "தற்போதைய தலைமை மாற்றப்பட்டுப் புதிய தலைமை தோன்ற வேண்டும் என வவுனியாவில் பேசியிருக்கின்றார்.

(ஈழநாடு 17-8-80)

# விடுதலைத் தென்றல் வீசும்...

—1-ஆம் பக்கத் தொடர்ச்சி

கலந்து கொண்டிருக்கிறோம். வரவுசெலவுத்திட்ட விவாதங்களிலும் கலந்துகொண்டு தமிழீழத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிப் பேசியுள்ளோம்.

இதன் மூலம் அரசாங்கத்துடன் எல்லாவிடயங்களிலும் ஒத்துழைக்கின்றோம் என்றோ தமிழீழத்தைக் கைவிட்டுவிட்டோம் என்றோ யாருங்கூற முடியாது. இன்று சிறிமா அம்மையாருக்கும்; பீலிக்ஸ் பண்டாரநாயகாவுக்கும் எதிராக, குடியியல் உரிமைகளை நீக்கும் மசோதாவை ஐ. தே. க. அரசு கொண்டுவருகிறது. அதனை நிச்சயமாக எதிர்ப்போம். அரசுக்கு எந்த வகையிலும் நாம் கட்டுப்பட்டவர்கள் அல்ல,

நம்மோடு இருந்தவர்கள் சிலரே இன்று உண்மைகளை மறைத்து திரித்து செய்திகளை வெளியிடுவதால் இக்கருத்துக்களை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறவேண்டியுள்ளோம்

அண்மையில் தமிழகம் சென்றிருந்த போது சந்தித்த தலைவர்கள் அறிஞர்களிலே புலவர் பெருஞ்சித்திரனார் ஒரு கருத்தைச் சொன்னார்.

அண்ணன், தம்பிக்கு இருந்த இரு நிலப்பாகங்களை இன்னொருவர் கைப்பற்றி இரண்டு பாகத்தையும்ஒன்றாக்கிகொஞ்சக் காலம் ஆண்டு அனுபவித்தான். அவன் அந்த நிலத்தை விட்டு வெளியேறும் போது முழுவதையும் அண்ணனிடமே கொடுத்துவிட்டுப் போனான். தம்பி அண்ணனிடம் உரிமைகோரி வழக்குப் போட்டான். வழக்குநடந்து கொண்டிருந்தது. ஒரு நாள் அண்ணன் தம்பிக்குச் சொன்னான்உன்பாகத்தைநீயேஉழுது பயிரிட்டு எடுத்துக்கொள் என்றான். தம்பி யோசித்தான் வழக்கு முடியவில்லை என்நிலம் என்னிடம் வரவில்லை. என் பாகமே கட்டாந்தரையாகிக் கிடக்கிறது. சரி என்பாகத்தை உழுதுவிதைப்போம், அது எனக்குள்ளநிலத்தை இன்னும் மீட்கவில்லை, வழக்கு நடந்து கொண்டேயிருக்கிறது இருப்பினும் உழுது பயிரிடுவோம் என்று அவன் தன் நிலத்தைப் பயன்படுத்தமுற்படுவது பிழையா என்று கேட்டார். அதுபோலவேதான் தமிழீழப் போராட்டம் நடந்துகொண்டிருக்கட்டும் அபிவிருத்திச் சபை மூலம் கிடைக்கும் நன்மைகளையும் பயன்படுத்திப் பாருங்கள் என்று கூறினார், அந்தநிலையிற்றான் நாமும் நிற்கின்றோம்.

சென்ற ஆண்டு இதே அரசு ஆட்சிமன்றத்திலே ஒரு தீர்மானத்தைக்கொண்டுவந்தது. வவுனியா மாவட்டத்துடன் மதவாச்சிப் பகுதியில் மூன்று சிங்கள உதவி அரசாங்க பிரிவுகளையும் இணைக்கத் தீர்மானித்தது. 72 ஆயிரம் சிங்களவர்களை வவுனியாவுடன் இணைப்பதை எதிர்த்து ஆட்சி மன்றத்திலிருந்து வெளியேறினோம் போராட்டத்தை தொடக்கினோம்.

இன்றைக்கு இந்த மாவட்ட அபிவிருத்திச்சபைச் சட்டமூலத்தால் வவுனியா மதவாச்சி இணைப்புத் தீர்மானம் இரத்துச் செய்யப்பட்டு 1978 ஆண்டுக்கு முன்னிருந்த வவுனியா மாவட்ட எல்லைகள் நிலைநாட்டப்பட்டிருக்கிறது இதனை ஏற்கக்கூடாதா?

அதுமட்டுமல்ல திருமலை மாவட்ட நிர்வாகத்தில் இருக்க வேண்டிய புல்மோட்டைப் பகுதிகள் அனுராதபுர மாவட்ட நிர்வாகத்தில் இருந்து வந்தன. அதனையும் மாற்றி புல்மோட்டைப் பகுதி திருமலை மாவட்ட நிர்வாகத்துடன் இணைக்க இந்த அபிவிருத்திச் சபைச்சட்டம்வழிவகுக்கிறது. இதை ஏற்படுத்தக்கூடாதா?

இந்த அபிவிருத்திச் சபைச் சட்டமூலம் நாட்டைப் பிரிக்க வழிவகுக்கிறது எனத் தென்னிலங்கையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும், பௌத்த குருமாரும், எப். ஆர். ஜெயசூரியா போன்றோரும் இனவாதப்பிரசாரத்தில இறங்கியிருக்கிறார்கள். நம்மவர்களோ அதிகாரமில்லை என்கிறார்கள். நாம் ஓரளவு சிறு அதிகாரமுண்டு என்றுதான் சொன்னால் ஏதும் நன்மையேற்படுமென்றுநினைக்கிறீர்களா?இனவாதப் பிரதிவாதங்களைச் செய்து கொண்டிருப்பதைவிட தமிழீழ இலட்சியத்தை அடைந்திட இனத்தின் ஒற்றுமையைக் கட்டிக்காத்து திட்டமிட்ட வழிகளிலும் இராஜதந்திர நடவடிக்கைகளிலும் இயக்கத்தை நடத்திச் செல்வோம்.

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் பற்றிய சட்டத்தின் மீது பாராளுமன்றத்தில் நான் பேசும் போதே ''சுதந்திரத் தமிழ் ஈழம்'' அமைக்கும் தமிழ் மக்களின் ஆணையை எடுத்துவிளக்கி அதற்காக நாம் உழைப்போம் என்பதனை ஆங்கிலத்திலும் தமிழிலும் உறுதியாகக் கூறினேன்.

தமிழ் ஈழத்திற்கான போராட்டம் எந்த வேகத்தில் நடத்தப்படவேண்டுமென்பதைக் காலத்திற்குக் காலம் நாம் முடிவு எடுத்து நடத்துவோம்.

# அமிர்தலிங்கம் தலைமை...

—5ஆம் பக்கத் தொடர்ச்சி

நான் சென்ற இடங்களெல்லாம் தமிழனைக் கண்டேன். அப்போதெல்லாம் தமிழனுக்கு உலகில் ஒரு நல்வாழ்வு வராதா, என்ற ஏக்கமே எனக்கு ஏற்பட்டது.

திராவிட இனத்தின் தாய் இனமான தமிழ் இனத்தை நான் திரும்பிப்பார்க்கிறேன். இங்கேஈழத்தில்நீங்கள்உங்கள் விடுதலைக்கானஒரு போராட்டத்தில் ஈடு பட்டிருக்கிறீர்கள், உங்களுக்கு மட்டுமல்ல எங்களுக்கும் பெருமை உலகத் தமிழர்கள்அனைவருக்கும்பெருமை என்கிற விதத்தில் உங்கள் விடுதலை இயக்கம் அமைந்திருக்கிறது. அதிலும் உங்கள் தலைவர் அமிர் இருக்கிறாரே அவரைத் தலைவராகப் பெற நீங்கள் கொடுத்துவைத்திருக்கிறீர்கள் என்றே கூறுவேன்.

எனக்கு நான்கு தலைவர்கள் இருந்திருக்கிறார்கள்அந்தநால்வரையும் விட உங்கள் தலைவர் அமிர்அவர்கள் ஒரு தனிச்சிறப்பைப் பெற்றிருக்கிறார்.என்னுடைய தலைவர்களாய் இருந்த பெரியார்– அண்ணா– கலைஞர் எம். ஜி. ஆர். ஆகியோரான நால்வருக்கும்பொதுவாழ்க்கைக்குஏற்ற மனைவியர்கள் அமையவில்லை. உங்கள் தலைவருக்கு மங்கையர்க்கரசியார் விடுதலைப் போராட்ட வாழ்வுக்கு உகந்ததலைவியாய் அமைந்து- தமிழ் உலகம் முழுவதற்குமே வீறூட்டி நிற்கும் வீரத் தாயாய்த் திகழ்கிறார்.

ஈழத்தமிழர்களாகிய உங்களிடம் ஒன்றைத்தான் நான் கூறி விடைபெறுகிறேன். தந்தை செல்வா ஒருபெரிய மனிதர் இந்த இயக்கத்தைத்துவக்கினார். தலைவர் அமிர் ஒரு பெரிய வீரர் இந்த இயக்கத்தை வழிநடத்துகிறார் தம்பி சிவகுமாரன் பெரிய தியாகி இந்த இயக்கத்துக்கு உரமூட்டி போனான் உங்கள் இயக்கத்தை ஒற்றுமையாய் இருந்து முன்னெடுத்துச் செல்லுங்கள் தொண்டர்களாகிய நீங்கள் விடுதலை நெருப்பைஅணையாது காப்பாற்றுங்கள்! தலைவராகிய அமிர் உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்வார்''

அப்போது போராட்டங்கள் எப்படி? எப்போ? நடத்தப்படவேண்டுமென்பது தமிழ் மக்களின் தீர்மானத்திலும் ஆட்கியாளர்களின் செயலிலும் தங்கியிருக்கிறது.

சிறீலங்காவின் பிரதமர் பிரேமதாசா தமது அபிப்பிராயத்தை எப்படிக்கூறினாலும் அதுநிச்சயம் தமிழர்விடுதலைக் கூட்டணியின் கருத்தாகமாட்டாதென்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

# சிலநேரங்களில்....

—7-ஆம் பக்கத் தொடர்ச்சி

தமிழீழ லட்சியத்தின் மேலும் பற்றுக்கொண்டு தமிழ் பேசும் மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கின்ற உணர்வை எழுதி வெளியிடுகின்ற திடீர் அரசியல் வாதிகளின் உண்மையான உள்ளஉணர்வைத்தமிழ் பேசும் மக்கள் இனம் கண்டு கொள்ள வவுனியா 'வசி' மிகவும் உதவுகின்றார். தமிழ் பேசும் மக்கள் எழுத்துவரிகளை மாத்திரமல்லவரிகளின் ஊடேயும் வாசிக்க வல்லவர்கள் என்பதை திடீர் அரசியல் வாதிகளுக்கு கூறிவைக்க விரும்புகின்றோம்.

-கீரன்– வவுனியா


## யாழ் - ராஜாவில்

8 வது வாரமாக
வெற்றி நடை போடுகிறது
அறிஞர் அண்ணாவின்

## வண்டிக்காரன் மகன்

(ஈஸ்ட்மன் கலர்)

திரைக் கதை வசனம் கலைஞர் — மு. கருணாநிதி

## யாழ் - சாந்தியில்

100 வது நாளை நோக்கி...
வெற்றி நடை போடுகிறது!

கமலஹாசன், ஸ்ரீ பிரியா, மஞ்சுளா, லதா
நடித்த

## நீயா?

(ஈஸ்ட்மன் கலர)
டைரக்ஷன் — துரை

ரொமின், ஹறிலிஸ்ற் நீர் இறைக்கும்
இயந்திரங்கள், உதிரிப் பாகங்களின்
ஏகவிற்பனையாளர்கள்

## துர்க்கா ஓட்டோ காட்வெயர்ஸ்

11, ஸ்ரான்லிரேட்
யாழ்ப்பாணம்.

உதய சூரியன் ஒளி உலகெலாம் பரவ
விரும்புகிறோம்! வாழ்த்துகிறோம்!

## நிறைஞ்சன் ஸ்ரோர்ஸ்

200, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

நீங்கள் மில்க்வைற் தயாரிப்புக்குத் தரும்
ஆதரவின் பயன்

— வசதி, வாய்ப்பு, பயன் கருதி மரங்களை நடுதல்.
— வீட்டுத்தோட்டம் விருத்தி செய்தல்.
— பனை வளம் பெருக்கிப் பயன்பல பெறுதல்.
— பசளைதரும் செடிகள் மரங்களை உண்டாக்குதல்
— ஊர்கள்தோறும் குளங்களை ஆளமாக்கி மழை நீரைத் தேக்குதல்.

— சனசமூக நிலையங்களில் வாசிக்க வழி செய்தல்.
— பக்தி நெறியில் பரமனைப் பணிந்து வாழப் பயிற்றுதல்.
— எல்லோரும் எல்லோருக்கும் சேவை செய்தல்.
— வள்ளுவர் நெறியில் வையகம் வாழ வழி வகுத்தல்.
— எல்லோரும் யோகாசனம் பயில வைத்தல்.

மில்க்வைற் மேலுறைகளைச் சேகரித்து பெறுமதிவாய்ந்த
பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## மில்க்வைற்சவர்க்காரத்தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

எங்களிடம் எல்லாவிதமான பலசரக்குச் சாமான்கள் விற்பனைக்குண்டு
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

## திருமுருகன்

களஞ்சியம்


உதய சூரியன் வெளியீட்டகத்தால் நல்லூர் சண்முகா பதிப்பகத்தில் 15-10-80 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.